# செயலாற்றுகை அறிக்கை

2024 – நான்காவது காலாண்டு

2024

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

## நோக்கு

**"நேர்மையை ஊக்கப்படுத்தும் நியாயமானதும் ஊழலற்றதுமான இலங்கை தேசத்தை நோக்கி"**

## செயற்பணி

**சட்டத்தை உறுதியாக அமுல்படுத்தல், தடுப்பு பொறிமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஆட்சியினூடாக ஊழலை ஒழித்து அதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உதவுதல், அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் மற்றும் நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்**


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01 |
| முறைப்பாடுகளை சமர்ப்பித்தல் | 04 |
| புலனாய்வுகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் | 06 |
| வழக்கு தொடுத்தல் மற்றும் வழிநடாத்தல் | 07 |
| தடுப்பு நடவடிக்கைகள் | 10 |
| மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம் | 11 |

## 01. அறிமுகம்

2023 ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளதோடு, சட்டத்தின் 3(2) உட்பிரிவின் பிரகாரம் அது குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவும் இடையறா வழியுரிமையையும் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே, ஆணைக்குழுவுக்கு சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரயோகிக்கும் போது அல்லது பணிகளை புரியும் போது சட்டத்தின் கீழ் உரித்துடையதாகவுள்ள ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை தவிர வேறு எந்தவித தலையீட்டுக்கும் கீழ்படியாது சுயாதீனமாக செயற்படவேண்டுமென 3(4) உட்பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.1 ஆணைக்குழுவின் அமைப்பு

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 4(1) உட்பிரிவின் பிரகாரம் சட்டத்தில் நிபுணத்துவம் கொண்டவரும், மேன்மையடைந்தவரும் மற்றும் ஆகக் குறைந்தது (20) இருபதாண்டுளைக் கொண்ட அனுபவத்தைக்கொண்டுள்ளவருமான ஆளொருவர், அத்துடன் பின்வரும்

I. குற்றப்புலனாய்வு மற்றும் சட்ட வலுவுறுத்தல்
II. சட்ட – மருத்துவக் கணக்காகய்வு
III. சட்ட – மருத்துவக் கணக்கியல்
IV. பெறியியல்
V. சர்வதேச தொடர்புகளும் இராஜதந்திரச் சேவைகளும்
VI. பொதுமக்கள் அலுவல்கள் முகாமை
VII. பொது நிர்வாகம்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில், நிபுணத்துவம் கொண்டவர்களும் மேண்மையடைந்தவர்களும் மற்றும் ஆகக் குறைந்தது (20) இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டவர்களுமான இரண்டு ஆட்களும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

அதற்கிணங்க,

- முன்னாள் மேன்முறையீட்டு நீதிபதி மற்றும் முன்னாள் பாராளுமன்ற பிரதி செயலாளர் திரு. டபிள்யு.எம்.என்.பி. இத்தவெல அவர்கள் - தவிசாளர்
- சிரேஷ்ட வங்கி அதிகாரியான மக்கள் வங்கியின் முன்னாளர் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் திரு.கே. பேர்னார்ட் ராஜபக்ஷ அவர்கள் - உறுப்பினர்
- மேலதிக மன்றாடியார் அதிபதி சனாதிபதி சட்டத்தரணி திரு. சேதிய குணசேகர அவர்கள் - உறுப்பினர்

ஆகிய உறுப்பினர்கள் மூவரும் 2024 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் கடமைகளை ஆரம்பித்தனர்.

## 1.2 ஆணைக்குழுவின் செயற்பாடுகள்.


1. 2023 இல 09 எனும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் நியாயமான புலனாய்வுகளை மேற்கொள்ளல், போதியளவு சான்றுகள் உள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தல் மற்றும் நீதிமன்றங்களில் அந்த வழக்குகளை வழிநடாத்தல்.
2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடங்கள் தொடர்பில் மத்திய அதிகாரபீடமாக செயற்படுதல்.
3. ஊழலை தடுக்கும் பொருட்டு இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பொருந்தனைகளை நடைமுறைப்படுத்தல்.
4. ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களின் தெளிவை அதிகரித்தல்.
5. ஊழல் எதிர்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
6. ஊழல் செயற்பாடுகளை கண்டறிவதற்காக அரச நிறுவனங்களின் சட்ட விதிகள், செயற்கோவைகள் மற்றும் நடவடிக்கை முறைகளைப் பரிசோதித்தல்.
7. ஊழலை ஒழிப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளை வழங்குதல்.
8. ஊழலைக் குறைக்கும் பொருட்டு தேவையான சட்டத் திருத்தங்கள் தொடர்பில் பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்.
9. ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாட் குழுவினரின் நியமனம், பதவி உயர்வு மற்றும ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள்.

## 1.3 2024 சனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு

1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இலஞ்ச ஆணையாளர் திணைக்களம் நீக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அமுலுக்கு வந்த இலஞ்சச் சட்டத்தின் கீழ் 1994 ஆம் ஆண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ், இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கு ஆணைக்குழு மேலும் வலுப்படுத்தப்பட்டதுடன், 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் புதிய உறுப்பினர்களின் கீழ் ஆணைக்குழு செயற்படுகின்றது.

## 1.4 ஆணைக்குழுவின் கட்டமைப்பு

தற்போது, ஆணைக்குழுவின் நிறுவன அமைப்பு பின்வருமாறு காணப்படுகின்றது. மேலும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தால் முன்னைய சட்டங்களால் வழங்கப்பட்டிருந்த கடமைகள் மற்றும் பொறுப்புகள் மாற்றம் அடைந்துள்ளதால் முன்னயை செயல்களுக்கு மேலதிகமாக ஆணைக்குழுவினால் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. எனவே ஆணைக்குழுவின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.



## 02. முறைப்பாடுகளை சமர்ப்பித்தல்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை பின்வரும் வழிகளில் இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அனுப்ப முடியும்.

- 1954 எனும் இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம்
- குயஒ செய்தி மூலம்
- மின்னஞ்சல் மூலம்
- சமூகமளித்து கைகளால் ஒப்படைத்தல்
- அலுவலக முகவரிக்கு பெயர் குறிப்பிட்டு அல்லது அனாமேதய அடிப்படையில் கடிதங்களை சமர்ப்பிப்பதன் மூலம்


2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பொதுமக்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் பொதுமக்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்தல் மற்றும் ஊழல் தடுப்பு பிரவினால் நாடு பூராகவும் நடாத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பிரஜைகள் அறிவூட்டப்படுகின்ற காரணத்தினால் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளின் அதிக வளர்ச்சிப் போக்கே காணப்படுகின்றது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் செயலகத்தினால் பரிசீலித்த பின்னர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கு சட்டத்துடன் தொடர்பில்லாத மற்றும் போதுமான உண்மைகளை வெளிப்படுத்தாத முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்தாமலிருப்பதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். 2014 முதல் 2024 செப்டம்பர் மாதம் வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையும், விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.

**கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 2014 – 2024 செப்டம்பர் வரை**

| வருடம் | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் | புலனாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை ** |
|---|---|---|
| 2014 | 2,345 | 863 |
| 2015 | 3,964 | 1,823 |
| 2016 | 3,450 | 2,435 |
| 2017 | 2,768 | 1,573 |
| 2018 | 3,465 | 2,086 |
| 2019 | 3,305 | 2,020 |
| 2020 | 2,764 | 1,909 |
| 2021 | 2,335 | 892 |
| 2022 | 2,512 | 921 |
| 2023 | 3,431 | 1,152 |
| 2024 | 4,267 | 1,105 |

** சுற்றிவளைப்புக்காக கிடைக்கப்பெற்ற




புலனாய்வு மேற்கொள்வதற்கு உத்தவிடப்பட்ட முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவுக்கு முன்னளிப்புச் செய்யப்படுவதோடு, வேறு நிறுவனங்களிலிருந்து அறிக்கைகளை கோருவதற்கு மற்றும் புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கு உள்ள சாத்தியப்பாடு தொடர்பில் பரிசீலிப்பதற்கு சட்ட அறிக்கைகளை கோருவதற்குத் தேவையான முறைப்பாடுகள் தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் செயலகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

**ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ள முடியுமான முறை**

**துரித அழைப்பு : 1954**

**மின்னஞ்சல் : உயைடிழஉ‰பநெ;உயைடிழஉ.பழஎ.டம**

**தொலைநகல் : 0112596360**

**முகவரி : 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07**

**ஆணைக்குழுவுக்கு நேரடியாக வருகைத்தந்தும் கையளிக்க முடியும்.**

## 03. புலனாய்வுகள் மற்றும் சோதனைகள்

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான புலனாய்வுகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத்தின் 42 ஆவது பிரிவின்படி,

- ஏதேனும் தகவல்களைப் பெற்ற பின்னர்
- முறைப்பாட்டைப் பெற்ற பின்னர்
- ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் அல்லது
- ஆணைக்குழுவினால் பெறப்பட்ட வேறு ஏதேனும் முக்கியமான விடயத்தின் அடிப்படையில்

ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பிக்க முடியும். சட்டத்தின் பிரிவு 41 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று புரியப்பட்டுள்ளதென ஆணைக்குழு திருப்தி அடைந்தால், புலனாய்வுகளை நடத்த முடிவு செய்யலாம். எவ்வாறாயினும், பிரிவு 41 இன் கீழ் குற்றம் புரியப்பட்டுள்ளதென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக ஆணைக்குழு திருப்தியடையுமிடத்து ஆரம்பகட்ட விசாரணையை நடத்தாமல் புலனாய்வுகளை ஆரம்பிக்க முடியும்.

### 3.1 புலனாய்வு நடவடிக்கைகள்

ஆணைக்குழுவினால் 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் புலனாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 1105 இற்குரிய கோப்புகளின் புலனாய்வு நடவடிக்கைகள் புலனாய்வுப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற கோப்புக்களையும் உள்ளடக்கி 2024.12.31 ஆம் திகதியளவில் 2,361 கோப்புக்களின் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2 சுற்றிவளைப்புகள் மற்றும் கைதுசெய்தல்

இலஞ்சம் பெற்றுக்கொள்ளல் அல்லது இலஞ்சம் கொடுத்தல் தொடர்பான நிகழ்வுகள் பற்றிய போதிய தகவல்கள் மற்றும் முறைப்பாட்டாளரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஏற்புடைய குற்றம் நிகழும் சந்தர்ப்பத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்டு கைதுகள் மேற்கொள்ளப்படும். 2024 ஆம் ஆண்டின் அவ்வாறான சுற்றிவளைப்புகள் 116 மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அவற்றில் 53 வெற்றியளித்துள்ளன. சுற்றிவளைப்புக்களின் போது 86 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**3.3 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டு வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் செய்யப்பட்ட கைதுகள்**


| வருடம் | மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை | சுற்றிவளைப்புக்களின் போது கைதுசெய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 2020 | 38 | 45 |
| 2021 | 33 | 36 |
| 2022 | 32 | 36 |
| 2023 | 43 | 57 |
| 2024 | 53 | 86 |

## 04. வழக்கு தொடுத்தல்

புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்து வழக்குத் தொடர முடியுமான கோவைகள் தொடர்பில் வழக்குகளைத் தொடுக்கும் பணி ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் 83 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதோடு, அக்காலப் பிரிவில் நிறைவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை 69 ஆகும்.


### 4.1 2020 ஆம் ஆண்டு முதல் 2024 மூன்றாவது காலாண்டு வரை தொடுக்கப்பட்ட வழக்குகளின் தகவல்கள்

| வருடம் | இலஞ்ச வழக்குகள் | ஊழல் வழக்குகள் | முறையற்ற சொத்துக்குவிப்பு வழக்குகள் | சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டாத வழக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2020 | 47 | 01 | 02 | -- | 50 |
| 2021 | 58 | 02 | -- | 02 | 62 |
| 2022 | 62 | 26 | -- | 01 | 89 |
| 2023 | 55 | 03 | 02 | -- | 60 |
| 2024 | 70 | 10 | 03 | | 83 |



## 4.2 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை நிறைவடைந்த வழக்கு களின் தகவல்கள்

| வருடம் | இலஞ்ச வழக்குகள் | ஊழல் வழக்குகள் | முறையற்ற சொத்துக்குவிப்பு வழக்குகள் | சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டாத வழக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2020 | 52 | | 03 | -- | 55 |
| 2021 | 62 | | 05 | 02 | 69 |
| 2022 | 90 | | -- | 07 | 97 |
| 2023 | 58 | 10 | 01 | -- | 69 |
| 2024 | 62 | 07 | -- | -- | 69 |



## 4.3 2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை, தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, நிறைவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை

| வருடம் | தொடுக்கப்பட்ட வழக்குகள் | | | நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் | | | எதிராளிகள் மற்றும் குற்றவாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | மேல் நீதிமன்றம் | நீதவான் நீதிமன்றம் | மொத்தம் | மேல் நீதிமன்றம் | நீதவான் நீதிமன்றம் | மொத்தம் | |
| 2015 | 76 | 32 | 108 | 41 | 11 | 52 | 15 |
| 2016 | 43 | 44 | 87 | 26 | 08 | 34 | 15 |
| 2017 | 41 | 32 | 73 | 68 | 20 | 88 | 57 |
| 2018 | 36 | 16 | 52 | 84 | 26 | 110 | 64 |
| 2019 | 37 | 09 | 46 | 75 | 19 | 94 | 54 |
| 2020 | 42 | 08 | 50 | 46 | 09 | 55 | 28 |
| 2021 | 57 | 05 | 62 | 43 | 26 | 69 | 09 |
| 2022 | 77 | 12 | 89 | 64 | 32 | 96 | 22 |
| 2023 | 56 | 04 | 60 | 60 | 09 | 69 | 19 |
| 2024 | 79 | 04 | 83 | 56 | 13 | 69 | 30 |

## 4.4 2024.01.01 முதல் 2024 ஆம் ஆண்டு வரை நீதிமன்ற தீர்ப்புகளால் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட பிரதிவாதிகளின் விபரங்கள்

| தொ. இல | நிறுவனம் | குற்றவாளியாக்கப்பட்ட உத்தியோகத்தரின் பதவி | குற்றவாளியாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மாகாண இறைவரித் திணைக்களம் - சப்பிரகமுவ | சிரேட்ட விலை மதிப்பீட்டாளர் | 01 |
| 02 | பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | பயணஓட்ட முகாமையாளர் | 01 |
| 03 | | சிவில் பிரஜைகள் | 10 |
| 04 | இலங்கை மின்சார சபை | அலுவலக உதவியாளர் | 01 |
| 05 | நவகம்புர தொகுதி<br>டயகம தொகுதி<br>பல்லேகம தொகுதி | கிராம அலுவலர் | 03 |
| 06 | பொலிஸ் திணைக்களம் | பொலிஸ் சார்ஜன் | 04 |
| | | பொலிஸ் காண்ஸ்டபில் | 02 |
| 07 | காணிப் பதிவாளர் அலுவலகம் - அத்தனகல்ல | பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 |
| 08 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | முன்னாள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் | 01 |
| 09 | இலங்கை புகையிரதத் திணைக்களம் | மேற்பார்வை முகாமையாளர் | 1 |
| | | புகையிரத ஊழியர் | 1 |
| | இலங்கை சுங்கத் திணைக்களம் | உதவி சுங்க அத்தியட்சகர் | 1 |
| | | சுங்க அத்தியட்சகர் | 3 |
| **மொத்தம்** | | | **30** |

## 4.5 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் 259 வழக்குகளின் விபரம் பின்வருமாறு

நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 26

மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 231

மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 02

## 05. தடுப்பு நடவடிக்கைகள்

இலஞ்சம் மற்றும் ஊழலின் தீமைகள் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, நாடளாவிய ரீதியில், அரசாங்கத் துறை, தனியார் துறை, கல்வித் துறை மற்றும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 5.1 2024.04.01 – 2024.12.31 வரை காலாண்டில் நடாத்தப்பட்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய சாராம்ச தகவல்கள்

| **நிகழ்ச்சித்திட்டம் நடைப்பெற்ற நிறுவனம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| அரசாங்க நிறுவனங்களின் அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு | 72 |
| அரச சார்பு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு | 45 |
| தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக | 11 |
| வேறு தரப்பினர் ஆட்களுக்கு | 2 |
| வெகுசன ஊடகங்கள் மூலம் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 9 |
| **மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **139** |

### 5.2 ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணையில் துருசுநு கருத்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய சுருக்கம் - 2024

| **நிகழ்ச்சித்திட்டம்** | | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **செலவு** |
|---|---|---|---|
| 01 | நம்பகமான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 4 | 3,233,021.42 |
| 02 | அரசாங்க நிறுவனங்களில் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 4 | 11,303,744.31 |
| 03 | ஊழல் மற்றும் மோசடிகள் நிகழ முடியுமான ஆபத்துள்ள அடையாளம் காணப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் | 5 | 1,589,876.50 |
| 04 | சமூக பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவூட்டல் ∴ பயிற்றுவித்தல் மற்றும் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 11 | 6,723,418.50 |
| 05 | கல்விப் பிரிவுக்கு நம்பகத்தன்மை, ஊழல் எதிர்ப்பு மற்றும் பெறுமானங்கள் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 3 | 1,876,747.53 |
| 06 | நியதிச்சட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தரை அறிவூட்டும் மற்றும் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயிற்சி வாய்ப்புகள் | 1 | 407,700.00 |
| 07 | அனுபவங்களைப் பரிமாற்றிக்கொள்ளும் அமர்வு மற்றும் கலந்துரையாடல் நோக்கத்திலான சிறந்த பயன்பாடு பரிமாற்றம் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் அமர்வுகள் | - | - |
| 08 | சிவில் சமூகத்துடன் ஊழல் எதிர்ப்பு மற்றும் தொடர்புடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் காலாண்டு அமர்வை நடத்துதல். | 2 | 407,905.00 |

அதற்கமைய, துருசுநு கருத்திட்டத்தின் கீழ் வெளியாட்கள் மற்றும் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் 30 நிகழ்ச்சித்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன. மேலும், ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர்கள், புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் தடுப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்தக் கருத்திட்டத்தின் கீழ் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன.

## 06. மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் போது தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களின் முகாகாமைத்துவம் மற்றும் நிதி முகாமைத்துவம் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் முன்னேற்றம் பின்வருமாறு,

### 6.1 மனிதவள அபவிருத்தி உள்நாட்டுப் பயிற்சிகள் (2024.09.30 – 2024.12.31 ஆம் திகதி வரையிலான 2024 நான்காவது காலாண்டுக்கு)

| இல | பயிற்சிப் பாட்டறை | பங்குபற்றியோரின் விபரம் | | செலவு (Rs.) |
|---|---|---|---|---|
| | | பதவி | இல. | |
| 01 | Salary Conversion Program | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 1 | Rs.13,000.00 |
| 02 | Graphic designing NVQ - IV | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 1 | Rs.45,000.00 |
| 03 | Workshop for officers recruited to the post of Assistant Director (Legal) of CIABOC | சட்ட உதவிப் பணிப்பாளர் | 16 | Rs.28,000.00 |
| 04 | Residential three-day workshop for new legal officers | சட்ட உதவிப் பணிப்பாளர் | 16 | Rs.24,000.00 (Lecture Charges) |
| 05 | Responsible for tax law and calculation of income tax liability | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 1 | Rs.13,500.00 |
| 06 | Drivers' training program | சாரதிகள் | 27 | Rs.3,350.00 (Lecture Charges) Rs.35,533.00 |
| 07 | Attitude and capacity development of primary and secondary level officers of the Commission | சட்ட உதவியாளர் | 2 | Rs.140,146.00 Rs.6,000.00 (Lecture Charges) |
| | | நூலக பொறுப்பாளர் | 1 | |
| | | பாதீட்டு உதவியாளர் | 1 | |
| | | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 5 | |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 8 | |
| | | தகவல் தொழிநுட்ப உதவியாளர்கள் | 2 | |
| | | முகாமைத்துவ உதவியாளர்கள் | 21 | |
| | | தட்டெழுத்தாளர் | 4 | |
| | | சுறுக்கெழுத்தாளர் | 1 | |
| | | அலுவலக உதவியாளர் | 23 | |
| | | சாரதிகள் | 6 | |
| 08 | Diploma Course in Public Procurement and Contract Administration | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | Rs.150,000.00 |

**6.2 மனிதவள அபிவிருத்தி வெளிநாட்டுப் பாடநெறிகள்
(2024.09.30 முதல் 2024.12.31 வரை)**

| இல | செயலமர்வு / பயிற்சிப் பாசறை | இடம்பெற்ற நாடு | காலப்பகுதி | பங்குபற்றியோரின் விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பதவிநிலை | எண்ணிக்கை |
| 01 | Criminal Justice Response to Corruption | ஜப்பான் | முதல் 20.10.2024 வரை 21.11.2024 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 1 |
| 02 | Workshop on the effective implementation of recommendations emanating from the country reviews in the framework of the mechanism for the review of implementation of the United Nations Convention Against Corruption (UNCAC) | மொஸ்கோ | முதல் 08.10.2024 வரை 10.10.2024 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 1 |
| 03 | Second resume fifteenth session of the implementation review group | ஒஸ்டிரியா – வியன்னா | முதல் 04.11.2024 வரை 08.11.2024 | ஆணையாளர் – III | 1 |
| | | | | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 1 |
| 04 | Participation in the joint meeting of Yeman in the second review cycle of the Mechanism for the review of Implementation of the United Nations onvention against Corruption | ஒஸ்டிரியா – வியன்னா | முதல் 11.11.2024 வரை 13.11.2024 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 1 |
| 05 | International Expert meenting on Asset Return and Sustainable Development | எதியோப்பியா | முதல் 11.12.2024 வரை 13.12.2024 | சட்ட உதவிப் பணிப்பாளர் | 1 |

## 6.3 2024.12.31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்

| செலவுகள் விபரக் குறியீடு. | நிதிக் குறியீடு | வகை/பொருள்/ விபரம் | பாதீடு ஒதுக்கீடு 2024 | 31-12-2024 வரையான செலவு |
|---|---|---|---|---|
| 010-1-1-0-1001 | 11 | சம்பளம் மற்றும் வேதனம் | 223,000,000.00 | 207,229,709.32 |
| 010-1-1-0-1001 | 21 | சம்பளம் மற்றும் வேதனம் | 16,800,000.00 | 16,800,000.00 |
| 010-1-1-0-1002 | 11 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறைநாள் சம்பளம் | 7,560,000.00 | 6,906,002.80 |
| 010-1-1-0-1003 | 11 | ஏனைய கொடுப்பனவுகள் | 321,300,000.00 | 320,906,688.23 |
| 010-1-1-0-1101 | 11 | பிரயாணச் செலவினம் - உள்நாட்டு | 5,000,000.00 | 4,958,231.73 |
| 010-1-1-0-1102 | 11 | பிரயாணச் செலவினம் - வெளிநாடு | 11,950,000.00 | 10,322,132.87 |
| 010-1-1-0-1201 | 11 | காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | 18,080,000.00 | 13,878,230.44 |
| 010-1-1-0-1202(002) | 11 | எரிபொருள் கொடுப்பனவு | 12,000,000.00 | 12,000,000.00 |
| 010-1-1-0-1202(009) | 11 | குழும வாகனங்களுக்கான எரிபொருள் | 28,864,000.00 | 12,053,357.89 |
| 010-1-1-0-1202(010) | 11 | பிற நோக்கங்களுக்கான எரிபொருள் | 100,000.00 | 62,903.64 |
| 010-1-1-0-1203(002) | 11 | சீருடைகள் | 200,000.00 | 156,000.00 |
| 010-1-1-0-1301 | 11 | வாகனங்கள் | 29,500,000.00 | 29,448,459.24 |
| 010-1-1-0-1302 | 11 | ஆலை மற்றும் பொறிகள் | 9,000,000.00 | 5,651,753.30 |
| 010-1-1-0-1303 | 11 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 5,000,000.00 | 722,688.85 |
| 010-1-1-0-1304 | 11 | மென்பொருள் பராமரிப்பு | 2,000,000.00 | 1,432,950.00 |
| 010-1-1-0-1401 | 11 | போக்குவரத்து | 3,600,000.00 | 2,147,284.94 |
| 010-1-1-0-1402 | 11 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 9,600,000.00 | 7,503,502.59 |
| 010-1-1-0-1403 | 11 | மின்சாரம் மற்றும் நீர் | 34,000,000.00 | 21,592,009.43 |
| 010-1-1-0-1404 | 11 | வாடகை மற்றும் வரி | 32,080,000.00 | 1,724,801.40 |
| 010-1-1-0-1405 | 11 | சுத்திகரிப்பு சேவைகள் | 12,000,000.00 | 11,117,663.12 |
| 010-1-1-0-1407 | 11 | பாதுகாப்பு சேவைகள் | 5,500,000.00 | 3,566,700.00 |
| 010-1-1-0-1408 | 11 | வாகனங்களுக்கான குத்தகைக் கூலி<br>வாகனங்கள் | 21,100,000.00 | 17,663,496.58 |
| 010-1-1-0-1409(138) | 11 | இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் சேவை ஒப்பந்தங்கள்<br>ஆலை மற்றும் பொறிகள் | 9,500,000.00 | 2,406,502.26 |
| 010-1-1-0-1409(139) | 11 | வாகனக் காப்புறுதி | 2,000,000.00 | 924,800.52 |
| 010-1-1-0-1409(140) | 11 | நானாவித சேவைகள் | 3,500,000.00 | 3,486,269.15 |
| 010-1-1-0-1505 | 11 | பங்களிப்புக்கள் மற்றும் உதவுதொகை கட்டணங்கள் | 2,050,000.00 | 0.00 |
| 010-1-1-0-1506 | 11 | அரச உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் வட்டி கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 1,200,000.00 | 792,234.08 |
| 010-1-1-0-1701 | 11 | இழப்புக்கள் மற்றும் தள்ளுபடி செய்யப்பட்டவை | 36,000.00 | 35,500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 010-1-1-0-2001 | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 30,000,000.00 | 22,127,701.84 |
| 010-1-1-0-2003 | 11 | வாகனங்கள் | 1,000,000.00 | 868,807.14 |
| 010-1-1-0-2102 | 11 | ஆலை, பொறி மற்றும் உபகரணங்கள் | 3,920,000.00 | 3,184,598.87 |
| 010-1-1-0-2103 | 11 | தளபாடங்கள் மற்றும் அலுவலக கருவிகள் | 12,000,000.00 | 10,593,694.39 |
| 010-1-1-0-2401 | 11 | ஆளணிப் பயிற்சிகள் | 2,900,000.00 | 1,047,998.08 |
| 010-1-1-3-2509 | 11 | பொதுமக்களுக்கான இலஞ்சம் மற்றும் ஊழல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள பொதுமக்களுக்கான இலஞ்சம் மற்றும் ஊழல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள | 13,750,000.00 | 1,472,163.62 |
| 010-1-1-4-2509 | 13 | நுரு - இலங்கை சட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - JURE (UNDP) - ஏனைய | 35,350,000.00 | 35,303,631.84 |
| 010-1-1-5-2509 | 11 | ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தல் | 25,000,000.00 | 24,373,324.80 |
| **தொடர்ச்சியான மொத்தம்** | | | **826,520,000.00** | **715,489,872.38** |
| **மொத்த மூலதனம்** | | | **123,920,000.00** | **98,971,920.58** |
| **முழு மொத்தம்** | | | **950,440,000.00** | **814,461,792.96** |

### 6.4 நிதி முன்னேற்ற சாரம்சம் 2024.12.31 ஆம் திகதிக்கு

| | வரவுசெலவு ஒதுக்கீடு 2024 | 2024.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 826,520,000.00 | 715,489,872.38 |
| மூலதனச் செலவினம் | 123,920,000.00 | 98,971,920.58 |
| மொத்தம் | **950,440,000.00** | **814,461,792.96** |

### 6.5 ஆளணித் தகவல்கள் 2024.12.31

| மட்டம் / நிலை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி |
|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 63 | 42 |
| மூன்றாம் நிலை | 218 | 07 |
| இரண்டாம் நிலை | 242 | 110 |
| ஆரம்ப நிலை | 126 | 84 |
| மொத்தம் | 649 | 243 |
| இலங்கை பொலிசின் இருநிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டு சேவைப் புரியும் புலனாய்வு உத்தியோகத்தர்கள் | 283 | 219 |
| **முழு மொத்தம்** | **932** | **462** |